**வெளிநாட்டு அலுவல்கள்  அமைச்சர் மாண்புமிகு மங்கள சமரவீர அவர்களினால் ஊடகங்களுக்கு வழங்கப்பட்ட குறிப்புரைகள்**
**இலங்கைக்கு அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலாளர் (நியமிக்கப்பட்டவர்) தூதுவர் தோமஸ் சனோன் அவர்களினால் செய்யப்பட்ட விஜயம் - வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு                    2015, டிசம்பர் 14ஆந் திகதி**

பெண்மணிகளே! கனவான்களே! உங்களுக்கு எனது மாலை வணக்கம்.
இன்று மாலையில் இலங்கைக்கு ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அரசியல் அலுவல்கள் உதவிச் செயலாளராகிய (நியமிக்கப்பட்டவர்) தூதுவர் தோமஸ் சனோன் அவர்களை வரவேற்பது ஓர் கௌரவமும் சிறப்புரிமையும் வாய்ந்த செயலாகும்.

தூதுவர் சனோன் அவர்கள் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் வெளிநாட்டுச் சேவையின் அதிசிரேட்ட தொழில்சார் உத்தியோகத்தர் என்பதுவும் அரசியல் அலுவல்களுக்கான இராஜாங்க உதவிச் செலயாளர் என்ற வகிபாக பதவி நிலைக்கு உயர்த்தப்படும் வரலாற்றில் 14வது நபர் என்பதுவும் உங்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கக்கூடும்.
ஐக்கிய அமெரிக்க இராச்சியத்திற்கும் இலங்கைக்குமிடையிலான தொடர்புகளைப் பொறுத்தவரை  இது ஓர் “மைல்கல் ஆண்டு” எனக் குறிப்பிடப்படலாம்.

- இவ்வாண்டின் சனவரி மாதத்திலிருந்து ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்து செய்யப்பட்ட முக்கியமான விஜயங்களைத் தொடர்ந்து தூதுவர் சனோன் அவர்களின் விடயம் இடம்பெற்றுள்ளது.
- சனவரி 8ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தலின் ஒரு சில நாட்களுக்குப் பின்னர் இராஜாங்க உதவிச் செயலாளர் Ms. நிஷா பிஷ்வால் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளமையை நீங்கள் நினைவு கூர முடியும். உண்மையிலேயே இவருடைய விஜயமானது ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கும் இலங்கைக்குமிடையிலான நீண்டகால தொடர்பு புதுப்பிக்கப்படுவதற்கான தொனியை ஏற்படுத்தியுள்ளது.
- இந்த விஜயத்தைத் தொடர்ந்து இவ்வாண்டு மே மாதத்தில் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் இராஜாங்கச் செயலாளர் மாண்புமிகு ஜோன் கெரி விஜயம் செய்துள்ளார். இது 43 ஆண்டுகளில் இராஜாங்க செயலாளர் ஒருவரினால் இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட முதலாவது உத்தியோகபூர்வ விஜயமாகும்.
- பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் ஆகஸ்ட் மாதத்தில் உதவி இராஜாங்கச் செயலாளர்களாகிய ரொம் மலினோவ்ஸ்கி மற்றும் நிஷா பிஷ்வால் ஆகியோர்களினால் புரியப்பட்ட விஜயமும் சனாதிபதி தேர்தல் முடிவுற்றதிலிருந்து 9 மாதங்களுக்குள் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்து செய்யப்பட்ட அமைச்சரவை மட்டத்திலான இரண்டாவது விஜயமாக கடந்த மாதத்தில் தூதுவர் சமந்தா பவர் அவர்களினால் புரியப்பட்ட விஜயமும் எமது தொடர்பைப் பலப்படுத்துவதற்கு உதவியுள்ளன.

தூதுவர் சனோன் அவர்களின் விஜயமும் அதற்கு முற்பட்ட சகல முக்கியமான விஜயங்களும் தற்போது எமது இரண்டு நாடுகளுக்குமிடையிலான தொடர்புகளின் அதி சிறந்த அளவு மட்டத்தைக் காண்பிக்கின்றன எனக் குறிப்பிடுவது பொருத்தமானதென நான் நினைக்கின்றேன்.

இந்த விஜயத்தின்போது தெரிவிக்கப்படும் கருத்துரைகள் எமது இரண்டு நாடுகளுக்குமிடையிலான தொடர்புகளைப் பலப்படுத்துவது மட்டுமன்றி எமது அந்தந்த வெளிநாட்டுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் முகவர் நிலையங்களுக்கு அதாவது பெயரளவில் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் இராஜாங்கத் திணைக்களத்திற்கும் இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்குமிடையிலான பங்குடைமைக்கும் வழிகாட்டுமென்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

எமது நாடு எமது பிரசைகளில் ஒவ்வொருவரினதும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பளித்து எமது சமூகத்தின் பல்லின, பல்கலாசார மற்றும் பன்மொழித் தன்மைகளைக் கொண்டாடுகின்றதுடன் சனவரி 8 ஆந் திகதியன்று எமது நாட்டை உண்மையிலேயே சமாதானமானதும் நல்லிணக்கமுடையதும் வளவாய்ப்புள்ளதுமானதும் அதிசிறந்த சனநாயகப் பாரம்பரியங்களுக்கு அமைவானதுமான நாடாக்கும் பயணத்தில் நாம் முன்னேறிக் கொண்டிருக்கும் நிலையில் தூதுவர் சனோன் அவர்களின் வருகையும் இலங்கைக்கு ஐக்கிய அமெரிக்க நாடுகள் வழங்கவிரும்பும் ஆதரவின் தன்மையும் மிகவும் உற்சாகமளிப்பனவாகவுள்ளன.

இன்று மாலையில் இடம்பெற்ற எமது கூட்டத்தில் நாம் இந்நாட்டு மக்கள் இலங்கையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மாற்றங்களிலிருந்து பெறக்கூடிய பல நன்மைகளையும் சமாதான பங்கிலாபங்களையும் பற்றிக் கலந்துரையாடியுள்ளோம். நாம் ‘எமது சமுத்திரங்கள்’ மாநாட்டில் இலங்கையின் பங்குபற்றுதலை உள்ளடக்கியும் மற்றும் இருதரப்பு வியாபாரத்தையும் முதலீட்டையும் கடற்கரையோர ஒத்துழைப்பையும் உள்ளடக்கியும் எமது பங்குடைமையை பலமாக்குவதற்கான வழிவகைகளைப் பற்றி கலந்துரையாடியுள்ளோம்.

மிகவும் முக்கியமாக ஐக்கிய அமெரிக்க நாடுகள் ‘இலங்கை பங்குடைமை கலந்துரையாடலின்’ எல்லைக்கோடுகள் பற்றிக் கலந்துரையாடியுள்ளோம். இவ்வாண்டு மே மாதத்தில் செய்யப்பட்ட தமது விஜயத்தில் செயலாளர் கெரி அவர்கள் ஐக்கிய அமெரிக்க நாடுகளும் இலங்கையும் ஓர் பங்குடைமைக் கலந்துரையாடலை நிறுவுமெனத் தெரிவித்துள்ளதை நீங்கள் நினைவு கூருவீர்கள். இராஜாங்க திணைக்களத்திலுள்ள அதிசிரேட்ட உத்தியோகத்தர் என்ற ரீதியில் தூதுவர் சனோன் அவர்கள் இந்த முக்கியமான பங்குடைமைக் கலந்துரையாடலுக்கு வழிகாட்டுவார். இன்று நாம் கலந்துரையாடலைச் செய்து இந்த கலந்துரையாடலில் அடித்தளமாகக் கொள்ளவுள்ள முக்கியமான துறைகளைப் பற்றி தீர்மானித்துள்ளோம். அதாவது பெயரளவில் அத்துறைகளாவன:

- ஆட்சி, அபிவிருத்தி, ஒத்துழைப்பு மற்றும் மக்களுக்கு மக்கள் தொடர்புகள்;
- பொருளாதார ஒத்துழைப்பு
- பாதுகாப்பு ஒத்துழைப்பு; அத்துடன்
- சருவதேச மற்றும் பிராந்திய அலுவல்கள்

அரசாங்கத்தின் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலுக்கும் எமது நாட்டு மக்களின் தேவைப்பாடுகளுக்கு ஒத்திசைவாகவும் எமது நாட்டின் மக்களின் தேவைப்பாடுகளுக்காக ஐக்கிய அமெரிக்க நாடுகள் - இலங்கை தொடர்பை உருவாக்குவதற்கான வழிவகைகளின் நோக்கில் கடந்த சில மாதங்களாக சனாதிபதியுடனும் பிரதம அமைச்சருடனும் கலந்துரையாடலைச் செய்ததன் பின்னர் இந்த நான்கு துறைகளும் தீர்மானிக்கப்பட்டன.

நான் முன்னர் குறிப்பிட்டது போல, தூதுவர் சனோன் இன்று இலங்கைக்கு வருகை புரிந்துள்ளார். இன்று மாலையில் இலங்கைக்கு வருகை தந்ததன் பின்னர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிலேயே அவருடைய முதலாவது கூட்டம் நடந்துள்ளது. நாளைக்கு அவர் கிழக்கு மாகாணத்திற்கு பிரயாணம் செய்யவுள்ளார். புதன் கிழமையன்று அவர் சனாதிபதி அவர்களையும், பிரதம அமைச்சர் அவர்களையும் சந்திப்பார். இதே நாளில் அவர் லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்திலும் ஓர் உரைநிகழ்த்தும் பொறுப்பையும் ஏற்றுள்ளார்.

இந்த வருகையை புரிந்தமைக்காக நான் தூதுவர் சனோன் அவர்களுக்கு நன்றியுடையவனாக உள்ளேன். இவ்வாண்டு மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட தமது வருகையின் போது செயலாளர் கெரி எமது தொடர்புகளை சாதகமான பாதைக்கூடாக கொண்டு செல்லப்பட வைத்துள்ளார். அதை மேலும் அதிகரிப்பதற்காக நான் தூதுவர் சனோன் அவர்களுடன் தொடர்ந்தும் ஈடுபடுவதற்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

இந்நிலையில் நான் கொழும்பில் உள்ள தூதுவர் அதுல் கெசாப் அவர்களுக்கும், அவருடைய குழுவினருக்கும் எமது இரண்டு நாடுகளுக்குமிடையே உள்ள பிணைப்புக்களை கடந்து கொண்டிருக்கும் தினம் ஒவ்வொன்றிலும் மென் மேலும் பலமாக்குவதன் பொருட்டு ஆற்றிய அவர்களுடைய களைப்பற்ற பணிக்காக எனது பாராட்டுதலை அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நான் தூதுவர் சனோன் அவர்களும், அவர்களுடைய குழுவும் இலங்கையில் ஒரு மகிழ்ச்சிகரமான தங்குகையை மேற்கொள்வதற்கான வாழ்த்துகையைத் தெரிவிப்பதுடன், தற்பொழுது உங்களிடையே ஒரு சிறிய உரையை ஆற்றுமாறு தூதுவர் சனோன் அவர்களை அழைக்க விரும்புகின்றேன்.

நன்றி.